


**21.04.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. நாட்டின் முழுமையான வளர்ச்சியே மத்திய அரசின் குறிக்கோள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மகளிர் இளைஞர்கள் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் வாழ்வாதாரத்தை நோக்கமாக கொண்டு அரசு செயலாற்றுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. **Spadex** விண்வெளி திட்டத்தின் இரண்டாவது கட்ட பரிசோதனைகள் விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

4. உலக கத்தோலிக்க சபை தலைவர் போப் ஃபிரான்சிஸ் இன்று வாடிக்கனில் காலமானார்.

5.தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு நடப்பு நிதியாண்டில் 21 ஆயிரத்து 905 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

நாட்டின் முழுமையான வளர்ச்சியே மத்திய அரசின் குறிக்கோள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 17-வது குடிமைப் பணிகள் தின விழாவின் ஒருபகுதியாக குடிமைப்பணி அதிகாரிகளிடையே இன்று உரையாற்றிய பிரதமர், கடந்த 10 ஆண்டுகளில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்த இந்தியா படிப்படியான வளர்ச்சிகளை முன்னெடுத்து சென்றதாக குறிப்பிட்டார்.

அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் விநியோகம் தொடங்கி அனைவருக்கும் தரமான கல்வி, தொழில் முனைவோருக்கு ஏற்ற நிதி உதவி, அனைத்து

கிராமங்களுக்கும் மின்னணு பொருளாதார பயன்கள் போன்றவை செயல்படுத்தப்பட்டதை அவர் எடுத்துரைத்தார்.

நாட்டில் அடுத்த ஆயிரம் ஆண்டுகாலங்களுக்கான எதிர்கால வடிவமைப்பிற்கு வழிகோலும் வகையில் வலுவான கொள்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக கூறியுள்ளார்.

இளைஞர்கள், விவசாயிகள், பெண்களின் வளர்ச்சிக்கான விருப்பங்களை பூர்த்தி செய்ய துரித செயலாக்கத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

அரசின் திட்டங்கள் மக்களை சென்றடைந்து ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்துவதே நல்லாட்சிக்கு அளவுகோலாக உள்ளது என்று அவர் எடுத்துரைத்தார்.

ஆளுமை வெளிப்படைத்தன்மை, படைப்பாற்றல் திறன், ஆகியவற்றின் மையமாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தின் 75ஆவது ஆண்டில் குடிமை பணி தின கொண்டாட்டங்கள் முக்கியத்துவம் பெறுவதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

முன்னதாக சிறந்த குடிமை பணி அதிகாரிகளுக்கு பிரதமர் விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

**********

<u>ஜே.டி. வான்ஸ்</u>

இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் **J.D. Vance** பிரதமர் திரு.நரேந்திரமோடியை இன்றுமாலை புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

சென்ற பிப்ரவரி மாதம் பிரதமர் திரு.நரேந்திரமோடியின் அமெரிக்க பயணத்தின்போது வெளியிடப்பட்ட இந்திய அமெரிக்க கூட்டறிக்கையின் செயலாக்கம் தொடர்பாக இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என தெரிகிறது.

பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் ஆராய உள்ளனர்.

மனிதவளம், ஜனநாயக நெறிமுறைகள், மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இந்தியாவும், அமெரிக்காவும் விரிவான பங்களிப்பை வழங்கி வரும் நிலையில் இருதலைவர்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அடுத்தகட்ட ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளுக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**********

<u>சீதாராமன்</u>

வளர்ச்சி அடைந்த பாரத இலக்கின் கீழ் மகளிர் இளைஞர்கள் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரசு செயலாற்றுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இந்திய வம்சாவளியினரிடையே இன்று உரையாற்றிய அவர் சூரிய சக்தி திட்டங்களுக்கு இந்தியா முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் திறன் மற்றும் மின்னணு பொது கட்டமைப்பு திட்டங்களுக்கும் இந்தியா தனி கவனம் செலுத்துவதாக எடுத்துரைத்தார்.

நிலையான வளர்ச்சியுடன் இந்தியா வேகமான பொருளாதார நாடாக உருவெடுத்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

**********

<u>இஸ்ரோ - ஜிதேந்திரசிங்</u>

இஸ்ரோவின் **Spadex** விண்வெளி திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்ட விண்கலன் ஒருங்கிணைப்பு டாக்கிங் பரிசோதனை இன்று வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இதுதொடர்பான பரிசோதனைகள் அடுத்த இரண்டு வாரங்களில் தொடங்கப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தமது சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின் பரிசோதனை முறைகளை பகிர்ந்துள்ள அமைச்சர், சென்ற ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி, **PSLV C-60** செயல் திட்டம், வெற்றிகரமாக தொடங்கப்பட்டதை அவர் எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து கடந்த ஜனவரி 16ம் தேதியில், செயற்கைகோள்கள் ஒருங்கிணைப்பு முதல்முறையாக நடைபெற்றதாகவும், சென்ற மாதம் 13ஆம் தேதி அவை பிரிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

**********

<u>போப் ஃபிரான்சிஸ்</u>

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஃபிரான்சிஸ் இன்று காலமானார்.

இன்றுகாலை மணி 7.35க்கு அவர் காலமானதாக வாடிக்கன் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அவருக்கு வயது 88.

**********

<u>மா.சுப்பிரமணியன் மானியக்கோரிக்கை</u>

தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு நடப்பு நிதியாண்டில் 21 ஆயிரத்து 905 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்திருக்கிறார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்துள்ள அமைச்சர் இது சென்ற நிதியாண்டை விட ஆயிரத்து 707 கோடி ரூபாய் அதிகம் என்றார்.

மாநிலத்தில் மருத்துவ துறைக்கான இந்நிதி முதலீடு மருத்துவ அமைப்பை வலுப்படுத்துவதில் உள்ள மாநில அரசின் அர்ப்பணிப்பை உறுதிசெய்வதாக அவர் கூறினார்.

திருவண்ணாமலை, திருநெல்வேலி, தர்மபுரி, மதுரை வேலூர் நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், எழும்பூர், சென்னை, பெரம்பலூர்,

மாவட்ட மருத்துவமனைகளிலும் ஊட்டசத்து மறுவாழ்வு மையங்களை அரசு ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

**********

<u>சட்டப்பேரவை கேள்வி நேரம்</u>

வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் தேவைப்படும் இடங்களில் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் நாங்குநேரி தொகுதியில் மூலைக்காரப்பட்டியில் இந்தாண்டே பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்றார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய அமைச்சர், திருச்சி மாநகராட்சி 10ஆவது வார்டில் குடிநீரில் கழிவு நீர் கலந்ததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டதாக கூறப்படுவதை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இப்பகுதியில் கோவில் திருவிழா தற்போது நடைபெற்று வருவதாகவும் அங்கு வரும் பக்தர்களுக்கு பொதுமக்கள் விநியோகிக்கும் நீர்மோர் மற்றும் குளிர் பானத்தினால் இந்த சம்பவம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் அவைகள் பகுப்பாற்விற்கு அனுப்பட்டுள்ளதாக கூறினார்.

அதேபோல் குடிநீரும் பரிசோதனைக்கு அனுப்பபட்டுள்ளதாக தெரிவித்தார்.

சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்ததாக கூறுவது முற்றிலும் தவறான செய்தி என்று கூறிய அவர் 4 வயது குழந்தை உயிரிழந்ததற்கும் இதற்கும் தொடர்பில்லை என்றார்.

குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி விரைவில் திறக்கப்பட உள்ளதாக கூறினார்.

இதேபோல் பாதாள சாக்கடை தோண்டும் போது உயிரிழப்பு நேரிட்டால் ஒப்பந்ததாரர், மாநகராட்சி மற்றும் அரசு மூலம் உரியநிதி வழங்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்

தமிழ்நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை நிரப்ப அதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி தெரிவித்துள்ளார்.

பல்லாவரம் தொகுதி திருநீர்மலை அருள்மிகு ரங்கநாதர்பெருமாள் திருக்கோவில் பணியாளர்களுக்கான 12 குடியிருப்புகள் அடுத்த மாதம் திறந்துவைக்கப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்தார்.

வாய்ஸ்

**********

கண்ணாடி இழைபாலம்

கன்னியாகுமரியில் 5 நாள் பராமரிப்பு பணிகளுக்கு பின்னர் கண்ணாடி இழைபாலம் சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்பட்டதை அடுத்து சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

இருவரி

கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சிறை கைதிகளுக்கான தனி சிகிச்சை பிரிவு கட்டிடத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

இந்த வார்டு முழுவதும் சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும் சாலை அருகே மியாவாக்கி குறுங்காடுகளை உருவாக்கிடும் வகையில் மரக்கன்றுகளை நடும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் இன்று தொடங்கிவைத்தார்.

3.5 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள இந்த குறுக்காட்டில் 40 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. செல்விமோகன் அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு வருவாய் கோட்டாச்சியர் தலைமையில் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் உறைவிடம் சாரா கோடைகால பயிற்சி முகாம் 21 நாட்கள் நடைபெற உள்ளதாக கூறியுள்ளார்.

தொடர்ந்து தடகளம் கால்பந்து கபடி வான்விளையாட்டு மற்றும் இறகு பந்து விளையாட்டுகள் 25ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை ஆட்சியர் அலுவலக மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வை ஒட்டி வரும் 12ஆம் தேதி இம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா உத்தரவிட்டுள்ளார்.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த 3 பேர் 30 கிலோ கஞ்சாவை பெங்களூருக்கு ரயில் மூலம் கடத்த முயன்றபோது ராணிப்பேட்டை அருகே வாலாஜா ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

**********

<u>வானிலை</u>

தமிழ்நாட்டில் வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஓரிரு பகுதிகளில் இன்றுமுதல் வரும் 27-ம் தேதிவரை மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

**********

<u>கிரிக்கெட்</u>

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்த்தாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

**********